# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 23 சனிக்கிழமை (07.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 200



SATS TECH

யாழ்.நகரின் முன்னணி Satellite & Cable TV நிறுவனம்

DIAL 021 222 5908


## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கொழும்பில் வைத்துக் கடத்தல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கொழும்பில் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை செய்யப்பட்ட முறைப்பாட்டில் யாழ்ப்பாணம் இலக்கம் 33, மண்பிட்டி, நாவாந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராஜா ஜெயராஜ் (வயது-27) மற்றும் அவருடன் கொழும்பு சென்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான நீக்கிலாப்பிள்ளை ஞானதாஸ் (வயது-58) ஆகிய இருவருமே காணாமல் போனதாக ஜெயராஜின் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

அவர்கள் இருவரும் கொழும்பு சென்று கடவுச்சீட்டுப் பெற்றுக் கொண்டு திரும்பிய போது கடந்த 4 ஆம் திகதி களனிப் பாலத்தில் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் எனத் தெரியவில்லை என்றும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து அவர்கள் இருவரும் கொழும்புக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தந்தையைச் சுட்டுக் கொன்று விட்டு மகனைக் கடத்திய ஆயுததாரிகள்

### ஆவரங்காலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி ஆவரங்கால் சந்திக்கு அருகாமையில் திருமணத் தரகர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுட்டுக் கொல்லப்பட்டவர் வதிரியைச் சொந்த இடமாகக் கொண்ட எஸ்.சிவகுமார் (வயது44) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சுன்னாகத்திற்குச் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிவகுமாருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற அவரது மகனையும் மோட்டார் சைக்கிளையும் ஆயுததாரிகள் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அப் பகுதியில் பதற்றம் நிலவியது. (06 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாத ஒழிப்பு யுத்தத்திற்கு பிரித்தானிய அரசு உதவ வேண்டும்

## பிரி.பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

**இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்கவென நடைபெற்று வரும் யுத்தத்திற்கு உதவிகளையும் ஆதரவையும் பிரித்தானியா வழங்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். இக்கோரிக்கையை பிரித்தானியாவின் புதிய பிரதமர் ஹேறால்டன் பிறவுணுக்கு ஜனாதிபதி கடிதம் மூலம் விடுத்துள்ளார்.**

(06 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்

### சர்வதேச நாணய நிதியம் நம்:பிக்கை

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினால் வேகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியுமென சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியது.

இச் சந்திப்பின் போதே அவர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை திருப்தியாகவுள்ளது. அரசாங்கம் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிதி மறுசீரமைப்பு என்பன குறித்துத் தாம் திருப்தி கொள்வதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். இதே வேளை கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி அனைத்து இன மக்களினதும் வாழ்க்கை நிலையை உயர்த்துவதே அர சாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(ச)

## கண்டி நகரில் பாதுகாப்புத் தீவிரம்

கண்டி நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பெரஹராவை குழப்பும் விதமான தாக்குதல் ஒன்று கண்டியில் இடம்பெறலாம் என்று புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டமையையடுத்தே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட பாரவூர்தி மற்றும் சிற்றூர்தி ஆகியன கண்டி நகருக்குள் ஊடுருவியுள்ளதாகவும் அவற்றைக் கண்டறியும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

## விடுதலைப்புலிகளின் தாக்குதலில் மட்டக்களப்பில் 6 இராணுவத்தினர் பலி

### இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் குடும்பிமலையை நோக்கி இராணுவத்தினர் நேற்றுக்காலை மேற்கொண்ட சிறப்பு இராணுவ நடவடிக்கையில் மேஜர் தர அதிகாரி உட்பட ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏழு பேர் காயமடைந்துள்ளனர். அப்பகுதியில் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

முன்னேறிச் செல்ல முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய மோட்டார் ரக எறிகணைத் தாக்குதலிலேயே இராணுவத்திற்கு இந்த இழப்பு ஏற்பட்டது.

காயமடைந்த இராணுவத்தினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றார் அவர். 80 மி.மீ. ரக மோட்டார் எறிகணைகளைப் பயன்படுத்திப் புலிகள் தாக்குதல் நடத்தி வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மன்னார் மற்றும் தொப்பிக்கலவில் விடுதலைப்புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது விமானப் படையினர் வான் தாக்குதல் (06 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளைப் பலமடையச் செய்யும் பேச்சுவார்த்தையை அரசாங்கம் நடத்தாது

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் பலமடையச் செய்வதற்கு ஏதுவான பேச்சுவார்த்தையை அரசாங்கம் ஒருபோதும் நடத்த முன்வராது என்று சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார். கிழக்கை வெகுவிரைவில் புலிகளிடம் இருந்து மீட்டு அங்கு புலிகள் தலைதூக்க முடியாதபடி பாதுகாப்பை அதிகரிக்கவுள்ளோம். அங்கு குடிநிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வருட இறுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தலை அங்கு நடத்திக் காட்டுவோம். பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க நாங்கள் பல வருடங்களாகப் போராடி வருகின்றோம். ஆனால் அனைத்துலகத்தின் மனிதஉரிமை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கும் புலிகளின் பிரசார பீரங்கியாகவும் ரணில் செயற்பட்டு வருகின்றார்.

மனித உரிமை மீறல்களை நிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்த அரசாங்கம் தற்போதும் தயாராகவுள்ளது. ஆனால் விடுதலைப்புலிகளை மீண்டும் (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பெண் இந்தியாவில் கைது

(சென்னை)

போலிக் கடவுச் சீட்டுடன் இந்தியா வந்த இலங்கைப் பெண்ணிற்கு 3 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இப்பெண் குவைத்திலிருந்து இக் கடவுச்சீட்டு மூலம் சென்னை விமான நிலையத்திற்கு வந்துள்ளார். இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட இப் பெண் ராஜபேட்டை மஜிஸ்ரேட் முன் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இதன்போது ராஜப்பேட்டை நீதிமன்ற நீதிபதி ரமேஷ்குமார் இப்பெண்ணுக்கு 3 வருட சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (ச)

# போட்டிப்பரீட்சைக்கு தோற்றாதோருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு அழைப்பு

இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வு போட்டிப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அழைப்புகள் கிடைத்ததுடன் பலர் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றியுள்ளனர். இலங்கை அதிபர் சேவைத் தரங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மாகாண மட்டத்தில் பல தினங்களாக நடைபெற்று வருகின்றன.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அனைவரும் அழைக்கப்பட்டிருப்பது தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள், ஊகங்கள் நிலவி வரும் அதேவேளையில், அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத சிலருக்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெற்றிருப்பதும், அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி இருப்பதும் பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய அடிப்படைத் தகைமைகளில் ஒன்று பரீட்சைக்கு தோற்றி இருக்க வேண்டும் என்பதும், ஆனால் பரீட்சைக்கு விண்ணப்பித்த நிலையில் பரீட்சைக்குத் தோற்றாதவர்களின் பெயர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவோரின் பட்டியலில் இடம்பெற்றுவிட்டது. இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்தார். (எ-5)

# 25 சந்தேக நபர்களை விசாரிக்க கொழும்பு நீதிமன்றம் அனுமதியளிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் 25 சிங்களவர்களுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாதம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து இவ் அனுமதியை நீதிவான் வழங்கியுள்ளார்.

சந்தேக நபர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிணை விடுதலை மனுக்களை ஏற்றுக் கொள்ளும் சட்டயாப்பு நீதிவானுக்கு இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 25 சந்தேக நபர்கள் தொடர்பான விபரங்கள் உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் நீதிவான் தெரிவித்தார். (ச)

# இலங்கை ரூபாய் கடுமையான வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவை அடுத்து நாணயமான ரூபாய் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இந்த சரிவு இறக்குமதியாளர்கள் தமது நிலுவைகளை டொலரில் செலுத்த வேண்டி வற்புறுத்தியதனால் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய பல மாதங்களாக ரூபாயில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியில் இது கடுமையான சரிவாகும். தற்போது ஒரு டொலரின் பெறுமதி 111.53-111.60 ரூபாயாகும்.

கடந்த யூலை மாதம் ஏற்பட்ட சரிவின் போது ஒரு டொலரின் பெறுமதி 111.46-111.53 ரூபாய்களாக இருந்தது. எனினும் இது 118-120 ரூபாய்களாக இந்த ஆண்டின் இறுதியில் மேலும் வீழ்ச்சி அடையலாம் என சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரூபாயின் இந்த வீழ்ச்சிக்கு எரிபொருட்களின் விலையேற்றம், நாட்டில் ஏற்பட்ட பணவீக்கம் என்பனவே காரணமாகும் என தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடம் 5 வீத வீழ்ச்சியை சந்தித்த நாணயம் இந்த வருடம் மேலும் 4 வீத வீழ்ச்சியை கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-5)

## கால்நடைத் தீவன விநியோகம்

யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டின் பேரில் எடுத்துவரப்பட்ட கால்நடைத் தீவனங்கள் கால்நடை கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகம் செய்யப்படவுள்ளன.

இத் தீவனத்திற்குரிய கப்பல் கட்டணத்தை விரைவில் செலுத்தவேண்டியிருப்பதால் மாடு, ஆடு, கோழிப் பண்ணையாளர்கள் மிக விரைவில் தீவனத்தினை பெற்று ஒத்துழைப்பு வழங்குமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

# தனியார் பஸ் உரிமையாளர்களுடன் அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் அரசாங்கம் தனியார் பஸ் உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளவிருக்கின்றது.

ஐந்து நிபந்தனைகளை உள்ளடக்கியதான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரினால் அடுத்த வாரத்தில் கைச்சாத்திடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆறு மாத காலத்திற்குள் ரிக்கட் வழங்குவதற்கான இயந்திரங்களைப் பயன்படுத்துவது, பஸ் வண்டியுள் காட்சிக்கு வைக்கப்படும் நேர சூசியின் பிரகாரம் சேவையில் ஈடுபடுவது, தூர இடங்களுக்கான சேவைகளில் ஈடுபடும் நேரங்களில் பஸ் வண்டிகளின் நுழைவாயில் கதவுகளை மூடி வைத்திருப்பது, சகல சமய மத குருமார்களுக்கும் கட்டணத்தில் 50 வீத கழிவுச் சலுகை வழங்குவது, புதிய நேர சூசிப்படி சேவையில் ஈடுபடுவது, சூழல் பாதுகாப்பு சட்ட விதிகளுக்கு இசைவாக நடந்து கொள்வது மற்றும் நடத்துநருக்கும் சாரதிக்கும் விசேட பயிற்சிகள் வழங்குவது உட்பட மற்றும் பல நிபந்தனைகள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஆட்கடத்தல்களுடன் தொடர்புடைய இருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைது

இலங்கையில் இடம் பெறும் ஆட்கடத்தல்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் பாதுகாப்புப் பிரிவினர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். ஆட்கடத்தல்களில் கைது செய்யப்பட்ட விமானப்படை முன்னாள் அதிகாரியான நிசந்த கஜநாயக்கவுக்கும் மகிந்தவின் சகோதரர் கோத்தபாயவுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதால் இந்த வழக்கின் விசாரணைகள் முடங்கும் நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ச-5)

# பொருட்களின் விலைகளைக் குறைத்தால் முப்படையினரின் வெற்றிகள் தடைப்படும்

## அநுராதபுரத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை ஜனாதிபதியின் சகோதரருக்கு வழங்கப்பட்டது தவறு என ஒரு சாரார் கூறி வருகின்றனர்.

அவ்வாறு எனின் அப் பதவியை ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரருக்கு பெற்றுக் கொடுக்கும்படி சொல்கின்றார்களா? என வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கேள்வி எழுப்பினார்.

மகாபொல நிதியத்தின் நிதி உதவியுடன் 22 இலட்சம் ரூபா செலவில் கலந்பிந்துனுவெல மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பிரதான மண்டபத்தின் திறப்பு விழா வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது; பொருட்களின் விலை அதிகரிப்பைப் பற்றி குரல் எழுப்பி மக்களின் இயல்புவாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்த முற்படுபவர்கள் விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியும்.

எனினும் தற்போது முப்படையினர் அடைந்து கொண்டு போகும் வெற்றிகள் அனைத்தும் தடைப்படும். விடுதலைப்புலிகளின் பலத்தை உடைத்தெறிய நாளாந்தம் பெருமளவு நிதியினை அரசு செலவழித்து வருகிறது.

இவ்வாறான பெரும் செலவுகளுக்கு மத்தியில் பொருட்களின் விலையை மட்டும் குறைப்பதென்பது முடியாத காரியமாகும். பொருட்களின் விலை அதிகரித்த போதும் சுதந்திரமாகவும் சுய கௌரவத்தோடும் வாழக்கூடிய வழிவகைகளை எமது நாட்டு மக்களுக்கு வழங்கி அவர்களின் மனங்களை வென்றுள்ளோம்.

வெளிநாட்டவர்கள் எமது அரசுக்கு உதவுவதில்லை என ஒரு சாரார் பிரசாரம் செய்து வருகின்றனர். வடக்குக் கிழக்கைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் வெளிநாட்டவர் எவரும் பங்கு கொள்ளமாட்டார்கள். நாமே நமது நாட்டை பாதுகாக்க வேண்டும் என்பது கூட இவர்களுக்கு விளங்குவதில்லை என்றார். (ச-5)

# பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணியளவில் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணி கலந்து கொள்கிறார். (ச-79)


## J/Kopay Christian College Kopay

## Prize Day-2007

Venue :-125th Anniversary Auditorium. J/Kopay Christian College On 07.07.2007, Saturday at 10.00 a.m

President :-MR.ARUNASALAM AHILADAS M.ED. SLPS I

Chief Guests :-DR.THAMBIAIAH KALAMANI EdD, Wollongong. Australia. Senior Lecturer Dept. of Education. University of Jaffna.

AND

MRS.QUEEN JESEELY KALAMANI B.A.Dip. in. Ed. (Teacher, Thevaraiyali Hindu College Karaveddy)

Speech of Blessings :-Rev.EN.N.Croos O.M.I

BRAMMASHRI P.SHANMUGARAJA KURUKKAL.

Speech of distinguished Guests:- MR.Y.RAVEENDRAN. Deputy Director of Education(E.D) Zonal Education office Jaffna.

MR.R.SIVAGNANASUNDARAM. Divisional Education officer. Kopay Division Jaffna Zone.

"Your Presence and Blessings Will Motivate Us."

Principal, Teachers, Students, Old Students Union, School Development Society. [J.Kopay Christian College]

(c-207)


# நான்கு கால்களுடன் பிறந்த குழந்தை

(டர்பன்)

தென் ஆபிரிக்காவில் உள்ள பிரிடோரியாவில் ஒரு பெண்ணுக்கு நேற்று முன்தினம் இரவு ஒரு குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு நான்கு கால்கள் இருப்பதைப் பார்த்து டாக்டர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

குழந்தையின் இடுப்புக்கு மேல் உள்ள உறுப்புக்கள் மற்றக் குழந்தைகளுக்கு இருப்பதைப் போலவே இருந்தது. இதுபற்றி பிரசவம் பார்த்த டாக்டர் கூறுகையில், இந்தக் குழந்தை ஒரு அபூர்வ குழந்தை என்றார். இந்த நான்கு கால் அதிசயக்குழந்தையை அங்குள்ள மக்கள் ஆர்வமுடன் பார்த்து வருகின்றனர். (எ-5)

# தேசிய கல்வியியற் கல்லூரி செயற்திட்ட ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயற்திட்டம், செயல்நிலை ஆய்வு தொடர்பான முன்னேற்ற மதிப்பீடு மேற்கொள்வதற்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுக்கொள்கிறார். அத்துடன் யூன் மாதக் கொடுப்பனவும் இன்று வழங்கப்படுமென அவர் அறிவித்துள்ளார். (ச)


## வெளிவந்துவிட்டது

இலங்கையின் முன்னணி ஆசிரியர் திரு.கணேசலிங்கம் அவர்களின்

தரம்: 5 வெற்றித் தேர்வு- 17 18 19

தரம்:4 வெற்றித் தேர்வு- 1 2 3

முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில்

தரம்:4 முதல் O/L வரை

2ந் தவணை வினாப்பத்திரம்

15/07 2007 ஞாயிறு

சகல புத்தகசாலைகளிலும் பதிவு செய்யுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-

077 3126807, 222 9016, 226 3815

## Vacancy for Engineers and Technical Officers

UN HABITAT Colombo invites applications for the following to engage in Tsunami Reconstruction work in the Jaffna District.

**Engineers**

Applicants should have B.Sc Civil Engineering from a recognized university with at least five years experience or JTO/NDT with ten years experience in the field of housing and infrastructure development in public sector, non-governmental sector or in international organizations.

Those with two years experience as an engineer in a UN Agency will also be considered.

**Technical Officers**

Applicants should have National Certificate in Technology (NCT) or equivalent with at least three years experience in housing construction and infrastructure development activities.

Please apply on or before 15 th July 2007 by email to.

**chandima@unhabitat.lk**

(F)

# வடக்கு மாகாண நிர்வாகத்தை இரு வருடங்கட்கு பிரபாவிடம் வழங்குங்கள் அதுவே தீர்வுக்கு வழி

## அமைச்சர் மஹிந்த விஜயசேகர

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது அவசியமாகும். வடக்கு மாகாணத்தை இலங்கையின் வலயமாக பிரகடனப்படுத்தி அதன் நிர்வாகத்தை இரண்டு வருடங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் வழங்க வேண்டும்.

இதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று விசேட செயற்றிட்ட அமைச்சர் மஹிந்த விஜயசேகர தெரிவித்தார்.

வடக்கு நிர்வாகத்தினை இரு வருடங்களுக்கு பிரபாகரனிடம் வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கு அவரின் நடைமுறைப் பங்களிப்பின் பிரதிபலனை வடக்கில் வாழும் தமிழ் மக்களால் தெளிவாக தெரிந்துகொள்ள முடியும்.

பின்னர் மஹிந்த ராஜபக்ஷவா? அல்லது வேலுப்பிள்ளை பிரபாகரனா? சிறந்த தலைவர் என்பதை வடக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இது எனது தனிப்பட்ட கருத்தாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு-கிருலப்பனையிலுள்ள ஐக்கிய தேசியக்கட்சி (ஜனநாயகக் குழு) வின் தலைமையகமான செத்செவனயில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது,

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவை ஜனாதிபதியாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பிரதமராகவும் கொண்டுவருவதற்கான அரசியல் சதித்திட்டம் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டில் யுத்தம் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு வடக்கு- கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படுவது அவசியம். எனவே இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் வலயமாக வடக்கு மாகாணத்தை பிரகடனப்படுத்தி இரண்டு வருடங்களுக்கு அதன் நிர்வாகத்தை பிரபாகரனிடம் கையளிக்க வேண்டும் .பின்னர் அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். இதன் மூலம் தமக்குத் தேவையான தலைவர் யார்? என்பதை மக்கள் தெரிவு செய்வர்.

நடைமுறைப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் பிரபாகரனுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுவது சிறந்தது. அவரும் திறந்த பொருளாதாரத்தால் எழும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கநேரிடும்.

இதன் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரபாகரன் என்ன செய்கிறார்? என்று வடக்கில் வாழும் 99வீத தமிழ் மக்களாலும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

சிங்களவர்கள் தமக்கு ஒன்றும் தருவதில்லை என்பதற்காக அவர்களைத் தாக்குவதற்கு மட்டுமே பிரபாகரன் தமிழ் மக்களால் பயன்படுத்தப்படுகிறார் . பிரச்சினையை தீர்க்கும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டால் மக்களால் அவரின் தரத்தை புரிந்து கொள்ள முடியும். ஆனால் கிழக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஹொங்கொங் நிர்வாக முறைமையை ஒத்த நிர்வாக அதிகாரம் பிரபாகரனுக்கு வழங்கப்படுவதன் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் போதியளவு முன்னேற்றம் காணமுடியுமாக இருக்கும். இவை எனது தனிப்பட்ட கருத்துக்களேயாகும்.

### தேசிய அரசாங்கம் வேண்டும்

இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஒருபோதும் முன் கொண்டுசெல்ல முடியாது. எனவே ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும். இதன் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். இவ்வாறான கூட்டிணைவு ஏற்பட்டால் மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் எனது அமைச்சுப் பொறுப்பைக்கூட விட்டுக் கொடுக்கத் தயார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கும் போது பொரும்பான்மை சமூகம் பாதிக்கப்படும் வகையில் அது அமைந்து விடக்கூடாது. இதேபோன்று பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது அவை சிறுபான்மை சமூகத்தை பாதிப்பதாக இருக்கக்கூடாது .

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்காக அடித்தால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது.

நாம் திருடர்கள் என்றும் துரோகிகள் என்றும் ஜே.வி.பியினர் சேறுபூசுகின்றனர். யார் பயங்கரவாத நடவடிக்கைகளில் களமிறங்கி துரோகத்தனம் புரிந்தவர்கள் என்பது ஜே.வி.பியினருக்குத் தெரியும். கூட்டணி ஆட்சி அமைவுக்காக கட்சி மாற்றம் சாதாரணமாகி விட்டது. அதனைப் பெரும் குற்றமாகக் கூறி விட முடியாது.

இந்த அரசாங்கத்தை வீழ்த்தி யாரிடம் பொறுப்பை வழங்குவது? எனவே நாம் இந்த அரசாங்கத்தை வீழ்த்த இடமளிக்கமாட்டோம். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதுவே எமது விருப்பம். அதனாலேயே நாம் 17பேரும் அரசாங்கத்துடன் இணைய வேண்டி ஏற்பட்டது.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தான் ஜனாதிபதியாக வருவதற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பிரதமராக்குவதற்கும் திரை மறைவில் முயற்சிகளை எடுத்து வருகிறார். (அ-5)

# கத்தியால் குத்தி மனைவியைக் கொன்ற கணவனுக்கு மரணதண்டனை - வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததுடன் மகளைக் குத்திக் காயப்படுத்திய வவுனியா வேப்பங்குளத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜெரமையா விசுவநாதன் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

இந்தக் கொலை வழக்கின் எதிரியாகிய ஆறுமுகம் கந்தசாமி தலைமறைவாகியுள்ள நிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் பிரதேசமாகிய வன்னிப் பகுதியில் தலைமறைவாகியுள்ள எதிரியைக் கைது செய்து தண்டனையை நிறைவேற்றுமாறு வவுனியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ள வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அதற்கான பகிரங்க பிடியாணையையும் பிறப்பித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வவுனியா வேப்பங்குளத்தில் வைத்து தனது மனைவியாகிய கந்தசாமி கமலாம்பிகை என்பவரை முதுகில் கத்தியால் குத்திக் கொன்ற ஆறுமுகம் கந்தசாமி அதனைத் தடுக்க முற்பட்ட தனது மகளாகிய தனு எனப்படும் கமலவேணியை கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக வவுனியா பொலிஸார் இந்த வழக்கில் எதிரிக்கு எதிராகக் குற்றம் சுமத்தியிருந்தனர்.

காயமடைந்த மகள் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உயிர் தப்பியதாகவும் பொலிஸ்ார் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

இறந்தவராகிய கந்தசாமி கமலாம்பிகையின் மரணம் தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்த டாக்டர் மனோரஞ்சன், கத்தியால் குத்தியதால் ஏற்பட்ட காயமும் அதனால் ஏற்பட்ட பெருமளவு இரத்த இழப்புமே மரணத்திற்கான காரணம் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின் போது அளிக்கப்பட்ட சாட்சியங்கள், கணவனாகிய எதிரியே மனைவியைக் கொலை செய்தார் என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபித்ததையடுத்து எதிரிக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஜெரமையா விசுவநாதன் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-5)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு பூசை முடிவுற்றதும் 'நாராயணன் மகிமை' எனும் விடயம் பற்றி செல்வன் த.தவநேசன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-35)

## ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் 112ஆவது மலர் வெளிவந் துள்ளது. (அ)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு UN HABITAT நிறுவனம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமி மீள்நிர்மாண வேலைகளைக் கையாளுவதற்காக பொறியியலாளர்களிடமிருந்தும், தொழில்நுட்பவியலாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பொறியியலாளர்களுக்கான விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் B.Sc குடிசார் இயந்திரவியல் சான்றிதழுடன் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் அல்லது JTO / NDT சான்றிதழுடன் அரச /அரசசார்பற்ற நிறுவனங்களில் வீடமைப்பு, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி வேலைகளில 10வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஓர் UN நிறுவனத்தில் பொறியியலாளராக இருவருட அனுபவமுள்ளவர்களும் கவனத்திற்கொள்ளப்படுவர்.

தொழில்நுட்ப அலுவலர்களுக்கான விண்ணப்பதாரிகள் (NCT) தேசிய தொழில்நுட்ப சான்றிதழுடன் வீடமைப்பு, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி வேலைகளில் குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை 15ஆம் திகதிக்கு முன்னர் chandima @ unhabitat.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பும் படி கேட்டுள்ளனர். (அ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(பருத்தித்துறை)

அருள்மிகு தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலயம், முருகன் ஆலயம், முத்துமாரி ஆலயங்களுக்கான தர்மபரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளின் விபரம் பின்வருமாறு,

தலைவர்- ஏ.நவரத்தினசாமி, செயலாளர் -எஸ்.வீரகத்திப்பிள்ளை, பொருளாளர்-வை. சண்முகவடிவேல், கணக்குப்பரி சோதகர் -ஏ.கனகசபை,

உபதலைவர்கள்- எஸ்.சாந்தலிங்கம் (அம்பாள் ஆலயம்), எஸ். முருகையா (முருகன் ஆலயம்), எஸ்.தங்கவடிவேல் (முத்துமாரி அம்மன்), உபசெயலாளர்-எஸ். சிவகுமார், உபபொருளாளர் -ரீ.ஸ்ரீகாந், முகாமையாளர்-(அம்பாள் ஆலயம்) ஆர்.இரத்தினகோபால், (முருகன் ஆலயம்)ஏ. இலட்சுமிகாந்தன், (முத்துமாரி ஆலயம்) பி.மார்க்கண்டு, செயற்குழு உறுப்பினர்கள்- கே.கோபாலசாமி, ஏ.சுப்பிரமணியம், கே.தேவராஜா. (அ-52)




இலங்கை வங்கியின் 'கிருஷி நவோதய' திட்டத்தின் கீழ் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கும் விழாவிற்கு பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத் தலைவர் எஸ்.நடனசபாபதி தலைமைதாங்கி உரையாற்றுவதையும், இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் எஸ். பஞ்சலிங்கம் இருப்பதையும் , இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் பி.ஆனந்தநடேசன் யுவதி ஒருவருக்கு காசோலையை கையளிப்பதையும் காணலாம். (பரு. நிருபர்)

# இன்று ஒரு தகவல்

## தேநீர்

[illegible]ார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் சீனா தேசத்தில் ஒரு ராஜா இருந்தார். அவர் பெயர் சுஷின்-நங்.

அவருக்கு ஒரு பழக்கம். அது என்னவென்றால் எந்நேரமும் வெந்நீர் குடிப்பது. எந்நேரமும் அவர் வெந்நீர் குடித்துக் கொண்டேயிருப்பார். அதற்காக அடுப்பிலே எந்நேரமும் வெந்நீர் கொதித்துக் கொண்டேயிருக்கும்.

ஒருநாள் அவருக்காக அடுப்பிலே தண்ணீர் கொதித்துக் கொண்டே இருந்தது.

அந்த நேரம் அடுப்புக்கு மேலே வளர்ந்திருந்த ஏதோ ஒரு செடியிலிருந்து காய்ந்து சருகாய் போயிருந்த ஓர் இலை கொதிக்கிற நீரிலே விழுந்துவிட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை.

கொஞ்ச நேரத்திலே அந்த வெந்நீர்ப் பானையிலிருந்து ஒரு நல்ல மணம் வர ஆரம்பித்தது. அந்த வெந்நீரை சாப்பிட்ட மன்னருக்கு அந்த வாசனை மிகவும் பிடித்துப் போய் விட்டது. என்ன காரணம் என்று பானையைப் பார்த்தால் அதற்குள் ஒரு இலை கிடந்தது.

சரி... இனிமேல் இந்த இலையைப் போட்டுத் தண்ணீரைக் கொதிக்க விடுங்கள் என்று உத்தரவு போட்டார் மன்னர். அந்த இலை என்னவென்று தெரியுமா? அது தான் தேயிலை!

ஆக, தேநீர் ஆரம்பமானது ஆசியாவிலே தான். அதன்பின், ரொம்பக் காலம் கழித்து 1610இல் தான் அது ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தது.

அப்போதெல்லாம் தேயிலை உற்பத்தி அதிகமாக இல்லை. அதனால் தேநீர் என்பது வசதியானவர்களுடைய வீடுகளிலே தான் கிடைத்தது.

இன்று, தண்ணீருக்கு அடுத்தபடியாக உகலம் பூராகவும் அதிகமாகப் பருகப்படுகிற பானம்... தேநீர்தான். காப்பி கூட அதற்கு அடுத்தபடியாகத் தான்!

ஒரு காலத்திலே ரஷ்யாவிலே எப்படி நடந்தது தெரியுமா? தெருவிலே தேநீர் வண்டி வருகிறதென்றால் மக்கள் ஓடோடி வந்து கூடுவார்களாம். அந்தக் காலத்திலே ஆஸ்திரேலியாவிலே ஒரு பழக்கம் உண்டு. அதாவது, காலையிலே வேலைக்குப் போவதற்கு முன் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதிலே சிறிதளவு தேயிலையைப் போட்டுவிட்டுப் போவார்களாம். மாலையில் திரும்பிவந்து அதையெடுத்துப் பருகுவார்களாம்!...

19ஆம் நூற்றாண்டின் மத்தியிலே, அமெரிக்காவிலே ஹார்பர்ஸ் என்ற பத்திரிகையிலே ஒரு வேடிக்கையான செய்தி வெளியாகியிருந்ததாம்.

அதாவது... ஒரு அமெரிக்க கிராமப் பெண்...தன் தோழியைப் பார்ப்பதற்காக நகரத்துக்குப் போனாள். அப்பொழுது தேயிலை என்பது ஒரு அபூர்வப் பொருள்! பணக்காரர்களுடைய வீடுகளிலே மட்டுமே அது பாவனையில் இருக்கும். அந்தத் தோழி ஓர் இறாத்தல் தேயிலை இவளுக்குக் கொடுத்திருக்கிறாள்.

அந்தக் கிராமப் பெண்... அதற்கு முன் தேயிலையைப் பார்த்ததே இல்லை. அவள் வீட்டுக்குப் போய் தோழி கொடுத்த பொதியைப் பிரித்துப் பார்த்திருக்கிறாள்.

இதுவும் ஒரு வகை கீரைபோல இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அந்த ஓர் இறாத்தல் தேயிலையையும் தண்ணீர் விட்டு வேக வைத்து வடிகட்டி சக்கையை வைத்துக் கொண்டு சாற்றை வெளியே ஊற்றி விட்டார்களாம்!

தேநீர் ஐரோப்பாவிலே காலடி எடுத்து வைத்ததுமே பிரான்ஸ் நாட்டு அறிஞன் ஒருவன் சொன்னானாம்...

"இது இந்த நூற்றாண்டை ஆள வந்திருக்கிற புது எஜமான்" என்று.

பிரிட்டிஷ்காரர்கள் தங்களுடைய முதல் கோப்பைத் தேநீரை அடைந்தது 1650இல்தான்! இன்னொரு முக்கியமான செய்தி- அமெரிக்காவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது யார் என்று நினைக்கிறீர்கள்? தேநீர்தான்!

அது எப்படித் தெரியுமா?

'பாஸ்டன் டீ பார்ட்டி' என்கிற வார்த்தை ரொம்பப் பிரபலம். திடீரென்று தேயிலைக்கு வரியை அதிகப்படுத்தி 342 பெட்டி தேயிலையை இங்கிலாந்து அமெரிக்காவுக்குக் கப்பலில் அனுப்பியது!

தேயில்ல மீது வரியைப் பொறுக்காத அமெரிக்கர்கள் 1773 டிசம்பர் 16ஆம் திகதி பிரிட்டிஷ் கப்பலில் இருந்த 342 தேயிலைப் பெட்டிகளையும் தூக்கி பாஸ்டன் ஹார்பர் துறைமுகக் கடலில் வீசிவிட்டார்கள்.

காலனி விடுதலைப் போருக்கு இதுதான் ஆரம்பம்! இப்படி தேநீரைப் பற்றி சுவையான செய்திகள் பல உண்டு. இந்தக் காலத்திலே யார் வீட்டுக்கு போனாலும் உடனே கிடைப்பது தேநீர். அதற்காகவே நண்பர்கள் வீட்டுக்குப் போகிறவர்களும் உண்டு!

ஒருத்தர், இது மாதிரி ஒரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார். நண்பர் உடனே ஒரு பெரிய கோப்பையில் தேநீர் கொடுத்தார்... அவரும் அதை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தார்... அவ்வளவுதான். அங்கே கட்டிப் போடப்பட்டிருந்த நாய் குரைக்க ஆரம்பித்தது. "ஏன் உங்கள் நாய் திடீரென்று குரைக்கிறது" என்று கேட்டார் இவர். அதற்கு நண்பர் சொன்னார்... "இந்த நாய் எப்பொழுதும் இப்படித்தான். அதனுடைய பாத்திரத்தில் யார் எதைச் சாப்பிட்டாலும் இப்படித்தான் குரைக்க ஆரம்பித்து விடுகிறது..."

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இன்று முதல் இலங்கை வங்கியின் சேமிப்பு மாதம் உங்கள் தேவையறிந்து சேவை வழங்க ஏற்பாடு

இலங்கை வங்கியின் சேமிப்பு மாதம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக வங்கியீன் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

அதிசய தினமான 07.07.2007என்ற திகதியன்று ஆரம்பமாகும் இலங்கை வங்கியின் சேமிப்புப் பரப்புரை இம்மாத இறுதிவரை நடாத்தப்படு மெனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் காலை யாழ்.பத்திரிகையாளர்களைச் சந்தித்து இலங்கை வங்கியின் இச் சேமிப்புப் பரப்புரை தொடர்பாக வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் மற்றும் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என். சிவரட்ணம் ஆகியோர் விளக்கமளித்தனர்.

அதில் சேமிப்பு பரப்புரை மாதத்தில் வங்கியின் அனைத்து ஊழியர்களும் மக்களை நாடிச் சென்று இலங்கை வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வைப்புகள் தொடர்பாக பரப்புரை செய்து உதவவுள்ளனர் எனக் குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

யாழ்.மக்களுக்கு சேவையாற்றவென முதல் முதலில் உருவாக்கப்பட்டது இலங்கை வங்கியெனவும் குடாநாடு பூராகவுமுள்ள அரசு ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களில் 75வீதமானது தமது வங்கியினூடாகவே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர். அத்துடன் பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள், முதியவர்கள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள் என சகலருக்கு முரிய அனைத்து வைப்புகள் மற்றும் கடன் வசதிகளையும் வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும் தற்போது இலங்கை வங்கியில் முகாமைத்துவம், யாழ்.குடாநாட்டில் கிடைக்கும் வைப்புகளிலும் பார்க்கக் கூடிய அளவு கடன் வழங்கலை மேற்கொள்ள அனுமதித்துள்ளதாக குறிப்பிட்ட வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் தற்போதுள்ள அசாதாரண சூழலிலும் யாழ்.மக்களுக்கு கடன் வசதிகள் தம்மால் நிறுத்தப்படவுமில்லையெனவும் தெரிவித்தார்.

இதேவேளை குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் அனைத்தையும் மிக விரைவில் கணனி மயப்படுத்தி நாட்டிலுள்ள அனைத்துக் கிளைகளூடாகவும் சேவையை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் கூறினார். (அ-5)

## தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம்

தீவகக் கல்வி வலயத்தில் தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான வெற்றிடம் உள்ளது. ஆசிரியர் சேவையில் தரம்1, 2-1, தமிழ் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப் பங்களை 20.07.2007ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் A.இராஜேந்திரன் கேட்டுள்ளார். (அ)

## முன்பள்ளி விளையாட்டு விழா

ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பி.ப 2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்குப் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதன் ஜெகதீ ஸன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் K.ஜெயந்திரன், முன்பள்ளி வலய இணைப்பாளர் விஷாகினி பிரபாகரன், ஆசிரியை திருமதி கலா ஸ்ரீதரன், பனை தென்னை அபிவிருத்தி முகாமையாளர் ச.புஸ்பராசா, ஆசிரியை செல்வி பிரதீபா சின்னராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர் அ.ஜெயசிங்கம், முன்னாள் நிலையத் தலைவர் அ.பவளன், முன்னாள் நிலையப் பொருளாளர் க.பாலகிருஷ்ணன், மாதர் அபிவிருத்தி, சங்கத் தலைவி, திருமதி அருந்தவமலர் நவரத்தினம் மாதர் அபிவிருத்தி சங்கப் பொருளாளர் திருமதி ஜீவராணி ரவீந்திரராஜா, பல்கலைக்கழக மாணவி செல்வி ஜெயந்தினி தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## இராசிபலன்

07.07.2007
(ஆனி 23, சனிக்கிழமை)
சப்தமி முற்பகல் 11.03 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 2.37மணி வரை
இராகுகாலம் 08.58-10.28 மணிவரை
சுபநேரம் 02.58-4.28 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, பிறருக்கு உதவுதல், சயன சுகக்குறை. |
| இடபம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை. |
| மிதுனம் | பெரியோரால் மதிக்கப்படுதல், தேகநலன், முயற்சி கைகூடும், அதிகாரம். |
| கடகம் | சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, குடும்பக் கவலை, பிரயாணம். |
| சிங்கம் | பொருள் விரயம், சரீரபீடை, காரிய தடங்கல், திடீர் நன்மை, |
| கன்னி | கலந்துரையாடல், அபூர்வசந்திப்பு, தேக நலன், விருந்துபசாரம். |
| துலாம் | தொழில்விருத்தி, உடல் நலம், சத்துரு ஜெயம், சுவாரஸ்யம். |
| விருச்சிகம் | பணக்குறைவு, மனக்கவலை, முயற்சி தாமதம், சிறுவியாதி. |
| தனுசு | தன்னம்பிக்கைக்குறைவு, உறவினர் சந்திப்பு, சுபசெலவு, புதியவிடயம். |
| மகரம் | நற்கீர்த்தி, தொழில் நன்மை, போசன சுகம், இனிய சம்பவம். |
| கும்பம் | எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், குடும்பக்கவலை, போசன சுகக்குறைவு. |
| மீனம் | சயனசுகம், புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை. |

- வளவன்

## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 6 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நான்காவது முறையாக நடாத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டி கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணிக் கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணி 47ஓவர்களில் 9விக்கெற் இழப்பிற்கு 186ஓட்டங்களைப் பெற்றது. ஜெயராஜா 40, ஜெயதீபன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். சைலேஸ் 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 21.3 ஓவர்களில் 4விக்கெற் இழப்பிற்கு 187 ஓட்டங்களைப் பெற்றனர். சிவராசா 47, ரொனி 38, ராஜாதித்தன் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, 15ஆம் திகதி நடைபெற இருக்கும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும் யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடை பெற உள்ள 2ஆவது அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் 22.07.2007 அன்று இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும். (அ)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசார விழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் பிரதேச கலாசார விழா, எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை யின் தலைவருமாகிய சி.சத்தியசீலன் தலைமையில் நடை பெறும் இவ் விழாவில் யாழ்.பல்கலைக்கழக முன்னை நாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமாகிய பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் 2006, 2007ஆம் ஆண்டுபிரதேச கலாசாரப் பேரவையினால் நடாத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் கலைத் துறைக்கு சேவையாற்றிய பிரதேச கலைஞர்கள் 11 பேர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் கவியரங்கு, இசை, நடன நிகழ்வுகள், நாடகம், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (அ)

## மகா கும்பாபிஷேகம்

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய புனருத்தாரண அஷ்டபந்த மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணி முதல் 10.21 மணிவரையுள்ள சுபவேளையில் நடை பெறவுள்ளது. கிரியாகால நிகழ்வுகள் 9ஆம் திகதி திங்கட்கிழமையும், 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00மணி முதல் மாலை 3.00மணிவரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். (அ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மாலிசந்தி பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழாவும் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆடிப் பிறப்பன்று தீர்த்தத் திருவிழா உற்சவமும் நடைபெறும். (அ-35)

ஒரு வெளவால் வீட்டிற்கு இன்னொரு வெளவால் வந்தால் அதுவும் தொங்கிக்கொண்டுதான் இருக்கவேண்டும்.

—இலங்கை

வலம்புரி

# யப்பான் தூதுவர் அகாஷிக்கு தன்நெஞ்சே தன்னைச் சுடுகிறது

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வை முன்வைக்குமாறு யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருவருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அகாஷி சர்வகட்சிக்குழுவினூடாக தீர்வை முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ் மக்கள் படும் இன்னல்கள், துன்பதுயரங்களை அறிந்திருந்த அகாஷி இணைத் தலைமை நாடுகள் கூட்டத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார்.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்திற்கு பின்னர் வெளியிடப்படும் கூட்டறிக்கை, இலங்கை அரசை சாடுவதாக இருந்தமையால் அதனை வெளியிடுவதற்கு யப்பான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இதனால் அந்தக் கூட்டறிக்கை வெளிவராமல் போனது.

அதேநேரம் இலங்கைக்குத் தேவையான நிதி உதவியை வழங்குவதற்கும் யப்பான் உடன்பட்டுக் கொண்டது.

இலங்கைக்குத் தேவையான நிதி உதவியை வழங்க முடியுமென இணைத் தலைமை நாடுகள் கூறியிருந்தாலும் முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். அதன் பின்னரே நிதி உதவியை வழங்க முடியு மென்ற நிபந்தனையையும் இணைத்தலைமைநாடுகள் விதித்திருந்தன.

எனினும் அந் நாடுகளின் நிபந்தனைகளை முறியடிக்கும் வகையில் யப்பான் நடந்து கொண்டது. குறிப்பாக இலங்கைக்கான நிதி உதவியில் பெரும் பங்கு வகிக்கும் யப்பான், தனது நிதி உதவியை இலங்கைக்கு வழங்கப்போவதாக அடம் பிடித்தது.

இதனால் இணைத் தலைமையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகள் தமது கொள்கையை-நிபந்தனையை இறுக்கமுடியாமல் போயிற்று.

யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போயுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தையும் வெளி மாவட்டங்களையும் இணைக்கும் ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யப்பானின் விசேட தூதுவர் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவது எவ் வகையிலும் நியாயமாகாது. அத்தகைய நியாயமற்ற செயல் அவரை உறுத்தியிருக்கவேண்டும் போல் தெரிகிறது.

அதாவது, இலங்கைத் தமிழர்கள் தமது வாழ்விடங்களை இழந்து அகதி முகாம்களிலும் வெளி இடங்களிலும் வாழ்கின்றபோது அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஆனால், இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது என்ற பெயரில் இலங்கை அரசிடம் யப்பான் நிதி உதவி வழங்கியுள்ளது.

இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் இருப்பிடங்கள் உயர் பாதுகாப்பு வலயமான பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும்போது அவர்களை எங்கே குடியமர்த்துவது?

இதுபற்றி யப்பான் தமிழ்த்தலைவர்களுடன் ஏதேனும் கலந்துரையாடியதாவெனில் இல்லவே இல்லை.

அப்படியானால் இலங்கை அரசுக்கு நிதி உதவி செய்யும் விருப்பில் மீளக்குடியமர்த்தல் என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஊகித்துக் கொள்ளமுடியும்.

எதுவாயினும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அகாஷிக்கு நெஞ்சு பொறுத்திருக்கும் போல் தெரிகிறது.

அதனால் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணுமாறு தொலைபேசியில் பேசி இருக்கிறார் அவர்.

# துப்பாக்கியால் அச்சுறுத்தி அரசாங்கம் நடத்த முடியாது

## சிறிபதி எம்.பி. சபையில் உரை

(கொழும்பு)

சிக்கலான நிலைமை ஒன்றில் துப்பாக்கியால் அச்சுறுத்திக் கொண்டு அரசாங்கத்தை நடத்த முடியாது என எதிர்த்தரப்பு ஆசனத்தில் அமர்ந்திருக்கும் முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி சபையில் தெரிவித்தார். யுத்தத்தில் புலிகளை வெற்றி கொள்ளவேண்டும். பயங்கரவாதம் அழிக்கப்படவேண்டும். அதற்காக யுத்த முகாமைத்துவம் அமைக்கப்படவேண்டும் எனவும் கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது; நீண்டகால யுத்தத்தினால் செலவுகள் அதிகரிக்கின்றன. இராணுவத்திற்கும் பொலிஸாருக்கும் சக்தியை கொடுப்பதற்காகவே அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

ஆனால் ஒருவருடைய கருத்தை நசுக்குவதற்காக துப்பாக்கியால் அச்சுறுத்துகின்றனர். இதனை நாங்கள் எதிர்க்கின்றோம். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கையும் அதுதான். லொஜ்களிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதன் மூலம் எம்மை பலர் வேறுவிதமாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பிரதமர் வருத்தம் தெரிவித்தமை பாராட்டுக்குரியது. பயங்கரவாதத்தை தோற்கடிக்கத்தான் வேண்டும். அதற்கு நாங்கள் எதிர்ப்பல்ல. ஆனால் மக்களை வருத்த முடியாது. யுத்தம் செய்வது என்றால் யுத்த முகாமைத்துவம் ஒன்றை அமைக்க வேண்டும். யுத்தத்தை முன்னெடுக்கும் வகையில் பொருளாதார பலம் எம்மிடம் இல்லை. பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட நான்கு மிக் -29 விமானங்களில் இரு விமானங்கள் செயற்படுத்த முடியாத நிலையில் இரத்மலானை விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திற்கு யுத்தத்தை இழுத்துச் செல்வதற்காகத் தான் மாவிலாறு நீரை புலிகள் மூடினார்கள்.

தற்போது கிழக்கு மாகாணத்தை கைப்பற்றி விட்டதாக கூறுகின்றீர்கள் அது நல்லதுதான். ஆனால் இந்த யுத்த தந்திரோபாயங்கள் சரியானவையா என்ற கேள்வி எழுகின்றது. யுத்தத்தை புரிவதற்கான நெஞ்சுறுதி படையினருக்கு வேண்டும். புலிகளை அழிக்கும் நோக்கம் அரசுக்கு இருக்குமானால் முதலில் கிளிநொச்சி, முல்லைத்தீவில் யுத்தத்தை ஆரம்பிக்கவேண்டும். அதுதான் யுத்த தந்திரோபாயம்.

நான் கடற்படையில் இருந்தவன். எனக்கு நல்ல அனுபவம் உண்டு. சிக்கல் மிகுந்த நிலையில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவது இயலாதது. எனது வீட்டிற்கு அருகில் கிளைமோர்க் குண்டு வைத்தது அரசின் உயர் அதிகாரி ஒருவர்தான். உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர்தான் அதனை எனக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிறிபதி அந்த கிளைமோர் உனக்கு வைக்கப்பட்டது அல்ல என்று கூறினார். ஆகவே தான் அச்சுறுத்திக் கொண்டு அரசை நடத்த முடியாது என்றார். (ஏ-5)

# இராணுவ வெற்றிகளை கௌரவிக்கும் நிகழ்வினை நடத்த அரசு திட்டம்

(கொழும்பு)

படையினரின் வெற்றிகளை கௌரவிக்கும் நிகழ்வினை இம் மாதம் 26 ஆம் திகதி நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தை படையினர் மீட்டெடுத்துள்ளதை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் நிகழ்வாக இதனை ஏற்பாடு செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் குடும்பிமலைப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றுமாறு முப்படையினருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 26 ஆம் திகதி நடைபெறவுள்ள வெற்றி விழாவின் மூலம் விடுதலைப்புலிகளை போரில் வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ எண்ணியுள்ளதாகவும் இதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் விரைவில் தீர்வு காணப்படும் என்ற செய்தியை அனைத்துலக சமூகத்திற்கு அவர் தெரியப்படுத்த விரும்புவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ள வெற்றிவிழாவின்போது முக்கிய படை அதிகாரிகள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் அவர்களின் வெற்றிகள் தொடர்பான ஒளிப்படக் காட்சிகளும் தேசிய ஊடகங்களின் ஊடாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை குடும்பிமலைப்பிரதேசத்தை கைப்பற்றுவதற்கான படையினரின் முயற்சி கடந்த பல நாட்களாக தொடர்கின்ற போதிலும் அதில் குறிப்பிடத்தக்க வெற்றியினை படையினரால் பெறமுடியவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் நலன்களை கருத்தில் கொண்டு மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் இந்த இராணுவ நடவடிக்கை குறித்து அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பியினரே பகிரங்கமாக விமர்சனங்களை முன்வைத்துள்ள நிலையில் குடும்பிமலையில் இராணுவம் மோசமான விளைவுகளை சந்திக்க நேர்ந்தால் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஏ-5)

# 07-07-07-ல் அப்படி என்ன அதிசயம்?

(கொழும்பு)

பள்ளிக்கூட பாடப்புத்தகத்தில் 7 உலக அதிசயங்களை சின்ன வயதில் படித்திருப்போம். மனப்பாடமும் செய்திருப்போம். இவற்றை ஓரம்கட்டி விட்டு விரைவில் புதிதாக 7 உலக அதிசயங்களை அறிவிக்கப்போகிறார்கள்.

இதற்கான வாக்கெடுப்பு இணையத்தளம், தொலைபேசி, குறுந்தகவல் மூலம் இறுதிக்கட்டமாக விறுவிறுவென நடந்து வருகிறது. இந்தத் தேர்தலும் கூட கடந்த ஏழு வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

இன்று 7 ஆம் திகதி போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் புதிய உலக அதிசயம் பற்றிய இறுதிமுடிவைப் அறிவிக்க இருக்கிறார்கள். இந்தத் திகதியும் கூட ஒரு அதிசயம் தான். ஏனெனில் யூலை என்பது ஆங்கில வருடத்தின் ஏழாவது மாதம். தேதியும் ஏழாந்திகதி. வருடமும் ஏழாவது வருடம் (2007) ஆக, இப்படி 07.07.07 என்ற திகதி நூறு வருடத்திற்கு ஒருமுறைதான் வரும்.

இந்துக்களின் நாட்காட்டி முறையிலும் கூட சந்திர ஆண்டு முறையில் இது ஏழாவது மாதத்தின் ஏழாவது நாளில்தான் வருகிறது. எனவே யூலை 7 ஆம் திகதி இப்போதே அறிவிக்கப்படாத விஷேட நாளாகிவிட்டது.

பொதுவாக 7 என்ற எண் சூப்பர் பவர் கொண்டது என ஜோதிடர்கள் கூறுவதுண்டு. இப்போது மூன்று எழுவருவதால் மிகச்சிறப்பான நாள் என்கிறார்கள். நம்பர் மோகம் கொண்ட அமெரிக்க வாழ் இந்திய இளைய தலைமுறையினர் இந்த நாளில் திருமணம் செய்து கொள்ள விரும்பி அதற்கான முன்பதிவும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் யூலை மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை வருகிறது. எஸ்.கே.ஜெயின் எனும் சோதிடக் கலைஞர் கூறுகையில் ஒற்றை இலக்க எண்களான 3,5,7,9 ஆகியவை எப்போதும் அதிர்ஷ்ட எண்களாகக் கருதப்படும். 07.07.07 இல் மூன்று எழு வருவதால் அது மும்மடங்கு அதிர்ஷ்டத்தை தரும் என்று விளக்கம் தருகிறார்.

இந்த யூலை 7 ஆம் திகதி மிகவும் பிரசித்தி பெற்ற நாளாக கருதப்படுவதற்கு காரணம் அன்று ஆனி மாத கிருஷ்ண பட்ச சப்தமி என்பதுதான். பொதுவாக இந்த நாளில் திருமணம் செய்து கொள்வதில்லை.

எனினும் இந்த சப்தமியோ, பௌர்ணமி முடிந்த 7 ஆம் நாளில் அதாவது யூலை 7 ஆம் திகதி வருகிறது. எனவே இந்த நாள் மிகவும் விசேஷமான நாள்தான் என்கிறார்கள். இந்துக்கள் சனிக்கிழமை அன்று திருமணம் வைத்துக் கொள்வதில்லை. என்றாலும் கல்யாண தொடர்பான விடயங்களை அன்று பேசி முடிக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. எது எப்படியோ உலக அதிசயப்பட்டியல் வெளியிடப்படும் நாளும் கூட வியப்புக்குரியதாகி விசேட நாளாகவும் மாறிவிட்டது. (ஏ-5)

# மூதூர் படுகொலை வழக்கின் துப்பாக்கி ரவை மாயம்

## விசாரணை நடத்தக் கோருகிறது சட்டவல்லுநர் குழு

மூதூரில் அரச சார்பற்ற நிறுவனப் பணியார்கள் 17 பேரின் படுகொலைகள் குறித்த விசாரணையின் முக்கிய தடயமான துப்பாக்கி ரவை காணாமல் போயிருக்கிறது. இந்த ரவை தொடர்பாக உடனடியாக விசாரணை மேற் கொள்ளப்பட்டு உண்மை வெளிப் படுத்தப்படவேண்டும் என் று அனைத்துலக சட்ட வல்லுநர்கள் குழு மூன்றாவது முறை யாக வலியுறுத்தியுள்ளது. அனைத்துலக சட்ட வல்லுநர்கள் குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது, மூதூர் படுகொலையின் தடயப் பொருட்களில் இருந்து காணாமல்போன ரவை தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தப்பட்டு தெளிவுபடுத்தப் படவேண்டும்.

இந்த ரவையானது படுகொலை செய்யப்பட்ட 17 பணியாளர்களில் ஒருவரது சடலத்திலிருந்து மீட்கப்பட்ட தாகும். படுகொலை நடைபெற்றபோது அப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரிடம் இதுவரை எந்தவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய விசாரணை நடைபெறுவது அவசியமாகும். இந்தப் படுகொலைக்கு நீதி கிடைக்காது விடின் அது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்குமென்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் அனைத்துலக சட்டவல்லுநர் குழு இந்தப் படுகொலை குறித்து அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-5)

# மனித உரிமை கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்பாது தடுத்த நோர்வே

## இராஜதந்திரிகள் தகவல்

மனித உரிமை கண்காணிப்பாளர்களை அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முயற்சிக்கு நோர்வே, யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் ஆதரவளிக்காது விட்டதன் மூலம் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கான உதவிகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு இணைத் தலைமை நாடுகள் தீர்மானித்துள்ளன. கடந்த மாதம் 25 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின்செயற்குழுக் கூட்டத்தின்போது அதற்கான திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியான ஜேர்மன் தூதுவர் தயாரித்திருந்தார்.

அனைத்துலகத்தின் தலையீடுகளின்றி இலங்கை அரசு தனது பிரச்சினைகளைத் தானே தீர்க்க வேண்டும் என்ற அவரது திட்டத்தை இணைத்தலைமை நாடுகளில் உள்ள ஏனைய மூன்று நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை.

மனித உரிமை கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற நடவடிக்கைகளையும் புறந்தள்ளி தமது உதவிகளை வழங்குவதற்கு இணைத்தலைமை நாடுகள் இணங்கியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட அனைத்துலக நிபுணர் குழுவிற்குத் தமது ஆதரவை வழங்குவதற்கும் இலங்கைக்கான உதவிகளை நிறுத்துமாறு பலநாடுகளிடமிருந்து எழுந்த அழுத்தங்களுக்கு மத்தியிலும் அதற்கான உதவிகளை வழங்குவதற்கு அவை இணங்கியுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைதி முயற்சிகளுக்கான யப்பானின் சிறப்புப் பிரதிநிதி யசூசி அகாஷி அமைதியான வழிகளில் தீர்வைக் காண்பதற்கு அரசு மற்றும் விடுதலைப்புலிகள் மீது இணைத்தலைமை நாடுகள் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார் என அவை தெரிவித்தன. (எ-5)

## மேலதிக அமைச்சுப் பதவி வகிக்கக் கூடாது- ஐ.தே.க.

இலங்கையில் ஜனாதிபதியும் பிரதமரும் தமது பதவிகளுக்கு மேலதிகமாக அமைச்சுப் பதவிகளை வகிக்கக் கூடாதுஎன்று கோரும் மனுவொன்றை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையும் அமைச்சரவைக்குத் தலைமை தாங்கும் பிரதமர் பதவியும் வகிப்பவர்கள் மேலதிகமாக அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை எதிர்காலத்தில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படுமானால் கடந்த முறை இடம்பெற்றதுபோல் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி கையேற்பதைத் தவிர்க்கும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்த மனுவை நீதிமன்றில் முன்வைத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச)

## பரிசளிப்பு விழா

நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் நூற்றாண்டு மலர் வெளியீடும் பரிசளிப்பும் நாளைக் காலை 9.30 மணிக்கு பாடசாலை கலையரங்கில் நடைபெறும்.

அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன், கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலர் த.நடராஜா ஆகியோரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். (ச-79)

## எரிபொருள், எரிவாயு, பால்மா என்பவற்றின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்த முடியாது

### நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்

(கொழும்பு)

எரிபொருள்கள், எரிவாயு மற்றும் பால்மா வகைகள் போன்றவற்றின் விலை உயர்வுகளை அரசாங்கத்தினால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. பலவந்தமாக எந்தப் பொருளினதும் விலைகளைக் குறைக்க முடியாது.

அரசாங்கத்தினால் சண்டித்தனம் செய்து பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது என்று வர்த்தக வாணிபத்துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களைக் குறைந்த விலையில் எவராலும் பெற்றுக் கொடுக்க முடியும் என்றால் அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அவர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுக்கவும் தயாராகவிருக்கின்றோம்.

குறைந்த விலையில் பொருள்களை வழங்குபவர்களுக்கு சிலை வைக்கவும் நான் தயார் என்றும் அமைச்சர் கூறினார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, நாட்டில் தற்போது உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய சதித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எப்போதும் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் போது தெற்கில் சதித் திட்டம் மேற்கொள்ளப்படுவது வழமையாகும்.

அந்த வகையில் தற்போது வாழ்க்கைச் செலவு உயர்வு என்ற விடயம் பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றது. ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுவதில்லை. உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுகின்றன.

2002 மற்றும் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் யுத்தம் இருக்கவில்லை. பாதுகாப்புச் செலவு குறைவாகவேயிருந்தது. அத்துடன் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மிகவும் குறைவானதாகும்.

எனவே அப்போது வாழ்க்கைச் செலவு குறைந்து காணப்பட்டது. ஆனால் தற்போது நாட்டில் விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் பயங்கரவாதம் இருக்கின்றது. அதேவேளை உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 141 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இருப்பினும் கடந்த ஜனவரி மாதம் 20 சதவீதமாக இருந்த பண வீக்கம் ஜூன் மாதம் ஆகும் போது 13 சதவீதமாகக் குறைந்துள்ளது.ஆனால் வாழ்க்கைச் செலவு உயர்வடைந்து விட்டதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நான் 13 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். அந்தப் பொருள்களுக்கான வற்வரியும் நீக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். ஆனால் தொடர்ந்து விமர்சிக்கப்படுகின்றேன். அப்படியானால் மேற்படி 13 பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்களாகப் பிரகடனப்படுத்தியமை தவறான விடயமா?

பொருள்களின் விலைகளைக் குறைத்தமை தவறான விடயமா? என்று கேள்வி எழுப்புகின்றேன் என்றார். (ச)

## அமைச்சர்களின் சம்பளம் பத்து வீதத்தால் குறைப்பு

(கொழும்பு)

அரசாங்க செலவீனங்களை முடிந்தளவில் குறைக்கும் நோக்கில் சகல அமைச்சர்களும் தமது சம்பளத்தில் பத்து வீதத்தைக் குறைத்துப் பெற்றுக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெறும் சம்பளத்தையே தற்போது ஒரு அமைச்சர் பெறுகின்றார். எனினும் நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு அரசு செலவீனங்களை முடிந்தளவு குறைத்து வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தத்தமது சம்பளத் தொகையில் பத்து வீதத்தைக் குறைத்துப் பெற்றுக் கொள்ள சகல அமைச்சர்களும் ஏக மனதாக முடிபெடுத்துள்ளனர்.

வேறு வருமானங்கள் உள்ள அமைச்சர்கள் விரும்பினால் இதைவிடவும் குறைத்துப் பெற்றுக் கொள்ளலாம். அது நாட்டுக்குச் செய்யும் பெரும் சேவையாகும் என அமைச்சர் மேலும் கூறினார். (ச)

## சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ அதிகாரிகள் போர்க் கொடி

### ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கெதிராக 42 இராணுவ அதிகாரிகள் போர்க் கொடி தூக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை அவர் பேசியதாவது,

சிங்களப் புலிகள் என்ற அமைப்பைத் தோற்றுவித்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதும் அரசாங்கமே. அமெரிக்காவிலிருந்து வந்த ஒருவரே ஆட்கடத்தலுக்கும் கப்பம் பெறுவதற்கும் காரணம்.

உண்மைகளைக் கூறினால் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று அரசாங்கம் அச்சுறுத்துகின்றது. கப்பத்திற்கும் ஆட்கடத்தலுக்கும் அஞ்சி தமிழர்களும் முஸ்லிம்களும் இந்தியாவிற்குத் தப்பியோடியுள்ளனர். விரைவில் சிங்களவர்களிடமும் கப்பம் கோரும் நடவடிக்கை தொடங்கப்படவுள்ளது.

கிழக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்ட போது அவர்களின் சடலங்களைக் கூட பொறுப்பேற்க அரசாங்கம் முன்வரவில்லை. நாட்டுக்காகத் தியாகம் செய்த இராணுவத்தினரைப் புலிகள் எனக் கூறிச் சடலங்களைப் பொறுப்பேற்க அரசாங்கம் மறுத்துவிட்டது.

இராணுவத் தளபதிக்கு எதிராக 42 இராணுவ அதிகாரிகள் இராணுவத்திலிருந்து வெளியேறத் தயாராகவிருக்கின்றனர். கிழக்கில் பல்வேறு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்ட இராணுவத் தளபதிகளுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தூய நோக்குடன் விமர்சனங்களை மேற்கொண்டால் நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்வதாகக் குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது என்றார் அவர். (எ-5)

## விடுதலைப்...

பலமடையச் செய்வதற்கு ஏதுவான பேச்சு வார்த்தையை நடத்த அரசாங்கம் ஒருபோதும் முன்வராது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவேயுள்ளது. அனைத்துக் கட்சிக் குழு விரைவில் தீர்வு யோசனையை முன்வைக்கும். அதை பேச்சுமேசையில் நாங்கள் முன்வைப்போம் என்றார் அவர். (எ-1)

## விடுதலைப்புலிகளின் தாக்கு...

நடத்தியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொப்பிக்கலவில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றின் மீதும் மன்னார் பாலம்பிட்டியிலும் புலிகளின் முகாம் ஒன்றின் மீதும் நேற்றுக் காலை முறையே 6.15 மற்றும் 6.20 மணியளவில் விமானப் படையின் கிபீர், ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இதில் புலிகளின் இலக்குகள் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## பயங்கரவாத ஒழிப்பு யுத்தத்திற்கு...

அக் கடிதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாவது,

எனது உறுதித் தன்மையை உங்களுடைய அரசாங்கத்துடனும் பிரித்தானிய மக்களுடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன். அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற உள்ளூர் பயங்கரவாதத்தைப் பிரித்தானியப் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதேபோல் எதிர்காலத்திலும் நட்பார்கள் என [illegible] நம்பிக்கையையும் தெரிவிக்கின்றோர், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான உங்களுடைய [illegible] ஆதரவையும் ஆர்வத்தையும் விமர்சனங்களையும் வழங்குவதுடன், தொடர்ந்தும் நெறிப்படுத்துவீர்கள் எனவும் நம்புகின்றேன்.

பயங்கரவாதிகளுடைய நோக்கத்தை அடைய விடாமல் நடப்பீர்கள் எனவும் நம்புகின்றேன். நாட்டில் பயங்கரவாத நடவடிக்கையால் பெறுமதி வாய்ந்த பொதுமக்களின் உயிரும் அவர்களின் அன்றாட வாழ்க்கையும் சொத்துக்களும் அழிந்து கொண்டிருக்கின்றன.

இலங்கை இரண்டு தசாப்தங்களாக பயங்கரவாதத்தினால் பேரழிவைச் சந்தித்துள்ளது என தற்போது உணரப்படுகின்றது. இப் பயங்கரவாதம் மக்களிடையே உள்ள அன்னியோனியத்தையும் ஜனநாயகத்தையும் அழிக்கின்றது..

இலங்கையிலுள்ள பிரித்தானியப் பிரஜைகளையோ அல்லது பிரித்தானியாவுக்கு எதிராகவே எடுக்கப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவோம். மேலும் எமது ஜனநாயகத்தின் உறுதித்தன்மையாலும் அதனுடைய ஈடுபாட்டாலும் பயங்கரவாதத்திற்கு நாம் அடிபணிய மாட்டோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரித்தானியாவின் புதிய பிரதமர் ஹோல்டன் பிறவுணுக்குவரைந்துள்ளகடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.(ச-5)

## தந்தை...

சம்பவ இடத்திற்கு நேற்று மாலை சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

**காவலாளி தேவை**

கந்தர்மடத்திலுள்ள வீடொன்றிற்கு இரவு நேரக் காவலாளி தேவை. அன்மையில் உள்ளவர்கள் 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியிலுள்ள வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும். (ஓ)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ [illegible] ஆல் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.